DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No.316/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | திரு.வீரண் (சிறப்பு சார்பு ஆய்வாளர்) (P.w.8) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 15th day of May 2026

( எதிரிகள் ஆஜர்.)

**முதல் விசாரணை :-**

நான் தற்போது நரிக்குடி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 30.06.2022ம் தேதியன்று நரிக்குடி காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது கடந்த 12.09.2020ம் தேதியன்று 13.00மணிக்கு நான் காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது திருச்சுழி அரசு மருத்துவமனையில் இருந்த தகவலைப் பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்து துலுக்கன்குளத்தைச் சேர்ந்த சுப்பிரமணி மகள் வள்ளிமயில் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று பின்பு நிலையம் வந்து மனு ரசீது எண்325/2020

கொடுத்து மனுவினை விசாரித்து 13.09.2020ம் தேதியன்று 19.30மணிக்கு அதன் தன்மைகேற்ப நிலைய குற்ற எண்.176/2020 பிரிவுகள் 294(பி), 323, 506(2) இதச மற்றும் 4 of TNPHW Act –ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** அசல் முதல் தகவல் அறிக்கையையும், வாதியின் புகாரையும் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் அவர்களுக்கும், உயர் அதிகாரிகளுக்கும் சமர்பித்தேன். வழக்கின் கோப்பினை புலன் விசாரணைக்காக சார்பு ஆய்வாளர் திரு.பாபு அவர்களிடம் ஒப்படைத்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி –**

1. 12.09.2020ம் தேதி காலை 9.00மணிக்கு சண்டை நடந்தபிறகு காவல் நிலையத்திற்கு நேரடியாக வந்து வள்ளிமயில் புகார் அல்லது தகவல் கொடுக்கவில்லை என்றால் சரிதான். புகார் பெறும்போது வள்ளிமயிலை நேரடியாக பார்த்தேன் என்றால் சரிதான். வள்ளிமயிலின் கையில் குழந்தை இருந்ததா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கை 13.09.2020ம் தேதி நடந்த சம்பவத்திற்கு 30 மணி நேர காலதாமதத்திற்கான காரணம் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு எப்போது சமர்பிக்கப்பட்டது என்றால் 13.09.2020ம் தேதி சமர்பிக்கப்பட்டது. மு தல் அறிக்கையானது நீதிமன்றத்திற்கு 18.09.2020ம் தேதி சமர்பிக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியவில்லை. வள்ளிமயில் திருமணம் ஆனவரா என்றால் திருமணம் ஆகி விவகாரத்து ஆனவர்.

2. இந்த வழக்கில் அதே ஊரைச் சேர்ந்த அர்ச்சுணன் என்பவருடன் வள்ளிமயில் திருமணம் செய்துள்ளாரா என்றால் அப்போது திருமணம் செய்யவில்லை, அவருடன் தொடர்பில் இருந்துள்ளார். எதிரிகளை தாக்கியதாக மேற்படி அர்ச்சுணன் என்பவர் மீது PCR வழக்கு நான் பணியில்

இருந்த காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தை யார் எழுதினார் என்றால் நான்தான் எழுதினேன். புகார்தாரரிடம் புகார் வாக்குமூலம் பெறும்போது அறிவேன் சாட்சியாக உடன் இருந்த நபர்கள் யாரிடமும் கையொப்பம் வாங்கவில்லை என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தை நான் பெறும்போது புகார்தாருக்கு வெளிப்படையான காயங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். கம்பாளி கிராமத்தில் இருந்து காவல் நிலையம் சுமார் 7 கிமீ தூரம் இருக்குமா என்றால் இருக்கும். PCR வழக்கில் அர்ச்சுணன் என்பவர் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

3. நான் சொன்ன நாள், நேரத்தில் புகார் வாக்குமூலம் பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே இருந்த முன்விரோதத்தினால் வள்ளிமயில் என்பவர் போலியாக கொடுத்த புகார் வாக்குமூலத்தைப் பெற்று எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் அதனால்தான் காலதாமதமாக புகார் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட காரணம் பொய் புகார் என்பதால்தான் என்றால் சரியல்ல. புகாரில் சொல்லப்பட்ட விபரங்கள் அனைத்தும் பொய்யாக மிகைப்படுத்தி கூறப்பட்டவை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

**இல்லை.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.